## தலைப்பு 262 – மாத்தறை மாவட்ட செயலகம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க

கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மாத்தறை மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ஹ) | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267∴2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ஹை) பந்தியின் பிரகாரம் வேறு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ஏனைய பெறுவனவுகளாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபா 181,134,730 ஆன வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267∴2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பு காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் கட்டுநிதி மீதி ரூபா 3,154,850,991 ஆக இருந்த போதிலும் அது ரூபா 181,134,730 குறைத்து ரூபா 2,973,716,261 எனக் காட்டப்பட்டிருந்தது. | மேலே குறிப்பிடப்பட்ட படி | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாலிம்பட மற்றும் திஹகொட ஆகிய 02 பிரதேசங்களுக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி மற்றும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த பெறுமதிக்கு இடையே ரூபா 3,883,290 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267∴2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விடுபாட்டினால் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்த பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தினதும் 10 பிரதேச செயலகங்களினதும் சொத்து மீதிகளை காண்பிக்கும் போது முன்னைய ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் அந்த வேறுபாடு உட்பட பெறுமதி குறைவாக ரூபா 296,297,567 கூட்டுத்தொகை உட்பட பெறுமதி அதிகரிப்பாக ரூபா 1,489,194 ஆன வேறுபாட்டை இனங்கண்டு சீராக்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மேலே குறிப்பிடப்பட்ட படி | இந்த அதிகளவிலான வேறுபாடுகளில் Cigas கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மொடியுலுக்கு உள்ளடக்க முடியாமையால் ஏற்பட்ட வேறுபாடொன்றாக குறிப்பிடுகின்றேன் அவ்வேறுபாடு தற்போது இனங்காணப்பட்டுள்ளதால் 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குமாறு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்திற்கும் 14 பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் தகவல்களுக்கு | ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் சொத்துக்களில் உரித்து முறைப்படி கையேற்றல் மற்றும் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் | ஏனைய அமைச்சுக்கள் ∴ திணைக்களங்கள் வழங்கப்படும் நிதி ஏற்பாட்டின் மூலம் கையேற்கப்பட்ட சொத்துக்களை ஏதேனும் சட்ட ரீதியான வகையில் கையேற்குமாறு அந்த |

| | | | |
|---|---|---|---|
| | இடையே ரூபா 83,177,743 ஆன வேறுபாடு கண்டறியப்பட்டது. அவ்வாறே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களிடமிருந்து கையேற்கப்பட்ட ஏனைய நிறுவனங்களிடமிருந்து கையேற்கப்பட்ட சொத்துக்களின் உரித்து முறையாக கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சு∴திணைக்களங்களிடம் கோருமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 06 பிரதேச செயலகங்களுக்குரிய காணி இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267∴2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | காணி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (உ) | 06 பிரதேச செயலகங்களுக்குரிய கட்டிட நிர்மாணங்களுக்குரிய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் வேலை ஒப்பந்தங்களுக்காக முற்பணமாக மொத்த ரூபா 51,165,380 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதில் நிர்மாணிக்கப்பட்ட வேலைகளின் பிரகாரம் மொத்தம் ரூபா 14,873,600 தொகை மீள அறவிடப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 36,291,780 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. தீர்வு செய்யப்படாத முற்பண மீதி நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 250∴2016 ஆம் இலக்க அரச கணக்கு கணக்குகள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப் பெறுமதி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் அசைவுக் கூற்றில் முடிவுறா வேலையாக உள்ளடக்கி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன |

### 1.6.3 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மின்சார உபரணங்கள் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பாக பதிவேடு மாவட்ட செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | காணப்படும் கட்டிடங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் உபகரணங்கள் இனங் காணப்பட்டு வருவதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் பதிவேடு தயாரிக்கப்படும். |
| (ஆ) | அடியிதழ்சேர் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் கம்புறுபிட்டிய பிரதேச செயலகத்தினால் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தற்போது பேணப்பட்டு வரும் பதிவேட்டில் குறைபாடுகள் பூர்த்தி செய்து பேணிச் செல்லுமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) | வாகன சம்பவப் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 1645(அ) வாகன சம்பவப் பதிவேடு திஹகொட பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டி ருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வாகன சம்பவப் பதிவேடு பேணப்படுகின்றதா என ஆராய்ந்து பார்த்து அறிக்கையிடுமாறு பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | பெறுகை குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்கு குழுவினதும் வருகை பதிவேடு | | |
| | பெறுகை குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்கு குழுவினதும் வருகை பதிவேடு மாவட்ட செயலகத்தி னால் பேணப்பட்டிருக்கவில்லை. | அரச கேள்வி வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மாவட்ட செயலகத்தின் பல பிரிவுகளினால் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படு வதால் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கைகளுக்கு உரிய அங்கத்தவர்கள் கையொப்பமிடுவார் எதிர்காலத்தில் தனித்தனியாக பதிவேடுகள் பேணிச் செல்லப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

(உ) கேள்வி கோரல் பதிவேடு

| | | |
|---|---|---|
| மாத்தறை பிரதேச செயலகத்தினால் கேள்வி கோரல் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அரச கேள்வி வழிகாட்டல் கோவையின் 5.2.1 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வழிகாட்டல் கோவையின் 5.2.1 வழிகாட்டலின் பிரகாரம் கேள்வி கோரல் பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 1.6.4 கணக்கீடு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதியுரை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு வேண்டிய மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருகக்வில்லை. |

## 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிவிதிக் கோவை | | | | |
| (ை) | நிதிப் பிரமாணம் 540(2) | தெவிநுவர பிரதேச செயலகத்தின் சிறாப்பரின் துணை பதிவேடு நாளாந்தம் சரி பிழை பார்க்கும் அலுவரால் முறைப்படி பரீட்சிக்கப்பட்டதை உறுதிப் படுத்துவதற்கு போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 540(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாவட்டத்தின் சகல பிரதேச செயலகங்களில் சிறாப்பரின் கடமைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு பரிசோதனையில் கூடுதலான கவனமொன்று செலுத்துமாறு பிரதான உள்ளகக் கணக்காளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 571 | மாத்தறை மாவட்ட செயலகத்தின் ரூபா 166,064,584 கூட்டுத் தொகையான 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட போது வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | போதியளவு கட்டுநிதி கிடைக்காமை சில நிறுத்தி வைத்தல் தொகையை விடுவிப்பதற்காக தேவையான ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக இப்பணத்தை விடுவிப்பதற்கு முடியாதுள்ளது. |
| (ஆ) | நிதி அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | 2017 யூன் 28 ஆந் திகதிய 01∴2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | 2018 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு நிறுவனத்தினாலும் கொள்வனவு செய்யப்படும் மற்றும் கைதவிரக்கப்படும் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் குறித்த காலாண்டின் இறுதியில் கொமிஸ்டொர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாவட்ட செயலகம் மற்றும் சகல பிரதேச செயலகங்களில் குறித்த மாதிரியின் பிரகாரம் அறிக்கை நாளதுவரையாக பேணுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | அதன் பிரகாரம் அத்தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | |

### 1.6.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 மே மாதத்தில் இடம் பெற்ற வெள்ள அனர்த்த காரணமாக முலடியன பிரதேச செயலகப் பிரிவில் வீடுகள் செதமடைந்தவர்களுக்கு இழப்பீடு கொடுப்பனவு செய்வதற்கு ரூபா 148,252,000 ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் 08 ஆந் திகதி வரை சேதமடைந்த 1,328 வீடுகளுக்காக ரூபா 96,969,317 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிலைய பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) வெள்ளத்தால் சேதமடைந் திருந்த போதும் எவ்வித திருத்தம்மொன்றும் மேற்கொள்ளப்படாமல் பயன்படுத்தப்பட்டு வந்த 02 வீடுகளுக்காக மொத்தம் ரூபா 957,313 முழு சேதமாக இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது. | வீடமைப்பு குழுவினால் பரிந்துரை வழங்கும் போது அதற்காக வழங்கியுள்ள ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக் கணக்காய்வு அவதானிப்பு தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீண்டும் ஆபத்துள்ள இடமொன்றான வீடொன்றிற்கு அந்த இடத்திலிலேயே வீட்டை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,200,000 ஆன இழப்பீடு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வீடமைப்பு குழுவினால் பரிந்துரை வழங்கும் போது அதற்காக வழங்கியுள்ள ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் தேவையான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | விண்ணப்பதாரி முதலில் வதியும் வதிவிடத்தை மாற்றுவதற்கு விருப்பமின்மையால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை மீண்டும் மதிப்பீடு செய்து கொடுப்பனவு செய்யப்படும். |
| (இ) கட்டிடத்தின் உரித்தினை உறுதிப்படுத்த முடியாதிருந்த வியாபார நிலையமொன்றுக்கும் வீடொன்றிற்குமாக ரூபா 1,056,225 | வீடமைப்பு குழுவினால் கொடுப்பனவிற்கு பரிந்துரை வழங்கும் போது அதற்காக | கிராம சேவையாளரின் தகவல்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்ததுடன் வீடமைப்பு குழுவின் |

| | | |
|---|---|---|
| தொகை இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. | வழங்கியுள்ள ஆலோசனைகள் தொடர்பாக கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டியதுடன தேவையான உறுதிப்படுத்தல்கள் சரியாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | உறுதிப்படுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. வியாபார பதிவு தேவையாக இல்லாமல் இருந்ததுடன தேசிய காப்புறுதி நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டிருநித வழிகாட்டல் மற்றும் 2016 யூலை 18 ஆந் திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.1 செலவின முகாமைத்துவம்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 செலவின விடயங் களுக்காக மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டி ருந்தமையால் அந்நிதிஏற்பாடு களின் பயன்பாட்டின் பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஒதுக்கீடுகளில் 8 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலவினம் கட்டுபடுத்த முடியாத தேவையான செலவினங்களை மேற்கொள்வதற்கு ஏற்ப்ட மேலதிக நிதிஏற்பாடுகள் தேவையான செலவின விடயங்களுக்காக பாதீட்டு திணைக்களத்தின் முறையான அங்கீகாரத்துடன் நிதிஏற்பாடு அதிகரித்துக் கொள்ளப்பட்டது. |

### 2.2 வைப்புக்கள்

------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 172,127,578 ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | போதியளவு கட்டுநிதி கிடைக்காமை சில நிறுத்தி வைத்தல் தொகையை விடுவிப்பதற்காக தேவையான ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக வைப்புக்களை விடுவிப்பதற்கு முடியாதுள்ளது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 1,695,199 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான ஊபையள கணக்கீட்டு அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 56,502,100 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267∴2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தொடர்பான ஊபையள கணக்கீட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிற்காக 11 பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 8,505,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 7,911,281 ஆன நிகழ்ச்சித்திடங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. ரூபா 596,800 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சித்திட்ட மொன்று மாத்திரம் தொடர் வேலையாக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,202,100 ஆன கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டலின் | அரச கேள்வி வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பெறுகை பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் அவ்வழங்குனருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,867,250 மற்றும் ரூபா 1,340,000 என ரூபா 3,207,250 பெறுமதியான பௌத்த புத்தகங்கள் மற்றம் உபகரணங்கள் பகிர்ந்தளிப்பதற்காக தேவைப்பாடொன்று குறிப்பிடப்படும் கடிதம் பகிரப்பட்ட திகதி, வழங்கப்பட்ட நிறுவனங்கள் போன்ற விபரங்கள் 2019 மே 07 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கடிதங்கள், ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் மற்றும் இந்நிதிஏற்பாட்டை முறையாக பயன்படுத்தியதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விநியோக கடிதங்களை வழங்குமாறு சமாதி மன்றத்திற்கு பல தடவை வாய்மொழி மூலமும் எழுத்து மூலமும் வேண்டுகோள் விடப்பட்ட போதும் கையொப்பத்துடன் கூடிய விநியோக பதிவேடு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மாத்தறை மாவட்டத்தில் மொழிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவினை வழங்குவதற்கு தேவையான பாடநெறிகளுகக்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 4,558,712 மற்றம் ரூபா 1,241,811 என ரூபா 5,800,523 பெறுமதியான கணனி மற்றும் உபபாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பிரதேசத்தின் அமைப்பொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு நடாத்தப்படுகின்ற பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் கணனி மற்றும் உதிரிப்பாகங்களின் தேவைப்பாட்டினை இனங்காணுதல் பாடநெறிகளைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றி தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செய்யும் போது நிதிப் பிரமாணம் 137 மற்றும் 138 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வேலைத் திட்டங்களின் செயன் முன்னேற்றம் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 மே 06 ஆந் திகதிய கடிதததின் மூலம் சமாதி மன்றத்தினால் இத்தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | தக்ஷின லங்கா மூன்றாம் நிலை மற்றும் தலைமைத்துவ பயிற்சி பீடத்திற்கு வழங்குவதற்காக பயிற்சி பீடத்திற்கு வழங்குவதற்காக | நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கும் கொடுப்பனவு செய்ய முன்னரும் சகல உறுதிப்படுத்தல்களையும் | இவ்விடயத்திற்குரிய தகவல்கள் சமாதி மன்றத்தின் மூலம் திட்டமிடல் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,000,000 பெறுமதியான சங்கீத உபகரணங்கள் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தன. 2014 மார்ச் 20 ஆந் திகதியின் பின்னர் அந் நிறுவனம் இயங்காதிருந்ததுடன் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த பாடநெறி களுக்காக சங்கீத உபகரணங்களின் தேவைப்பாடு காணப்படவில்லை. அவ்வாறே 2018 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் செயற்பாடு உட்பட பாடநெறி விபரங்கள் மற்றும் மாணவர் எண்ணிக்கை மற்றும் உபகரணங்களின் தேவைப்பாடு உட்பட கல்வி பீடத்தின் பதவியணியினர் மதியுரையாளர்களின் பதிவேடும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பெற்றுக்கொண்டு அதற்காக தேவைப்படும் எழுத்து மூல தகவல்களை உறுதிப்படுத்தும் போது மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (உ) | மாத்தறை மெத்தேவத்த நெல் களஞ்சியத்தை திருத்தம் செய்வதற்காக மாத்தறை மாவட்ட செயலாளருக்கு 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதி நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் ரூபா 2,198,354 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தினால் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 9,841,705 இற்கு (பெறுமதி சேர் வரியில்லாமல்) ஒப்பந்தத்தை வழங்கி 2017 நவம்பர் 22 ஆந் திகதி ரூபா 1,968,342 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதனுடன் அண்மித்தாக அமைந்துள்ள பல்கலைக்கழக கல்லூரியின் மாணவர்களின் எதிர்ப்பு காரணமாக 2018 சனவரி மாதத்தில் திருத்த வேலை இடை நிறுத்தப்பட்டிருந்த துடன் அதற்காக முறையான நடைமுறை யொன்றை பின்பற்றாமல் திருத்த | மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா கவும் வழங்கிய முற்பணத் தை தீர்வுசெய்வதற்கும் நிர்மாணத்திற்காக பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு உட்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல். | 2019 ஏப்ரல் மாதத்தின் போது நெல் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து கிடைத்த ரூபா 3,000,572 தொகையில் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை தீர்வு செய்வதற்குப் அதன் போது வழங்கப்பட்ட முற்பணத் தொகையை அறவிட முடியுமென தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரை அதற்காக ரூபா 1,968,342 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,951,301 ஆன கடப்பாடுகளுக்கு உட்பட்டிருந்த போதிலும் இந்நிர்மாணம் நிறுத்தப்பட்டுள்ளமையால் அதற்காக செலவிடப்பட்ட தொகை விளைவற்றதாக இருந்தது. | | |
| (ஊ) பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட விலை விபரங்களை பயன்படுத்தாமல் கிரிந்த புஹுலேவெல பிரதேச செயலக பிரிவின் இடைத்தொடர்பு அச்சுக்கள் பரப்பி 06 வீதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 372,443 தொகை மற்றும் திஹகொட பிரதேச செயலகப் பிரிவின் வீதிகள் நிர்மாணத்திற்கு ரூபா 539,941 மிகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பிரதேச செயலகங்களினால் மாவட்ட செயலாளர் நிர்ணயிக்கப்பட்ட கூறு விலைகளை அடிப்படையாகக் கொண்டு தரப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளாக இருப்பதால் தென் மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட அச்சுக்கல் விலை மதிப்பீட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் 08 பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டியிருந்தன. திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய கட்டிட நிர்மாண செயற்பாடுகளில் 03 உப செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டில் 48 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான வீச்சில் பயன்படுத்தப்படாமல் | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையின் பிரகாரம் வேலையை நிறைவேற்றாமையால் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் இறுதி அளவில் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 03 உப விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லைஅவ்வ ாறு நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகளுக்காக ரூபா 129.55 மில்லியன் உட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திக்வெல்ல மற்றும் திஹகொட ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களில் மேலதிக கட்டிட நிர்மாணங்கள் 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பெறுபெறுகளை விளைவுகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. அக்குரஸ்ஸ, வெலிபிட்டிய மற்றும் கிரிந்த புஹல்வெல்ல பிரதேச செயலகங்களின் கட்டிட புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் செயற்பாடுகளும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்கார்க்கப்பட்ட பெறுபேறு களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஒப்பந்தக்காரர்கள் உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகளை நிறைவேற்றா மையால் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் இறுதி அளவில் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. |

## 3.2 உள்நாட்டு நிதியங்களிலிருந்து செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தினால் உள்நாட்டு நிதிகளைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படும் 17 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,776.82 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 525.64 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 1,251.18 மில்லியன் அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 70 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். | பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் உறுப்பினர் நிதிஏற்பாட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் செயற்திட்டங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றன. ஆதலால் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டில் சேமிப்பொன்று இடம்பெறுகின்றது. |
| (ஆ) | 08 செயற்திட்டங்களுக்கு உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 652.84 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 1427 நிர்மாண வேலைகள் செயற்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். | திருத்திய செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்படாமை மற்றும் காலம் போதியதாக இல்லாமை ஒக்தோபர் மாதத்தில் ஏற்பட்டு அரசியல் சிக்கல்கள் காரணமாக வேலைகள் தற்காலிகமாக |

| | | |
|---|---|---|
| | | நிறுத்துவதாக அறிவித்தமை செயற்திட்ட அங்கீகாரம் மற்றும் போதியளவில் நிதி ஏற்பாடு கிடைக்காமை போன்ற காரணங்கள் காரணமாக இந் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. |
| (இ) 06 செயற்திட்டங்களுக்கு உரியதாக செயற்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த 152 நிர்மாணங்கள் மீளாய்வாண்டில் இறுதி வரை பூர்த்தி செய்ய தவறியிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 179,610,172 தொகையான மதிப்பிடப்பட்ட பெறுமதியான செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டிற்கு தொடர் வேலையாக்கப்பட்டிருந்தன.<br>அவ்வாறே, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2017 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டிற்கு தொடர் வேலையாக்கப்பட்ட ரூபா 847.55 மில்லியனான 81 செயற் திட்டங்களும் மீளாய்வாண்டில் நிதி ஏற்பாடு கிடைக்காமை காரணமாக 2019 ஆம் ஆண்டிற்கு தொடர் வேலையாக்கப் பட்டிருந்தன. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். | ஒவ்வெரு செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடு அதிகமாக இருப்பதால் சகல செயற்திட்டங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட கூறு விலையின் கீழ் பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் மேற் கொள்வதற்கு நேர்ந்தமையால் கூடிய காலம் எடுத்தல் மற்றும் 2018 நவம்பர் 08 ஆந் திகதிய பிரதமரின் செயலாளரின் கடிதத்தின் மூலம் அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக முன்னர் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிற்காகவும் நிதிஏற்பாடு வழங்கல் நிறுத்தப்பட்டது. |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதியின் திருத்த வேலைக்காக ரூபா 8,539,007 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் மொத்த கிரய மதிப்பீடு ரூபா 9,655,676 ஆக இருந்தது. அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றல் பாதுகாப்பு பிணை வேலை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நாளுக்கு பின்னர் 28 நாட்களுக்கு செல்லபடியாகி இருக்க | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பிரகாரம் மற்றும் நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்ட செலவின விடயங்களின் பிரகாரம் வெவ்வேறு பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் செயலாற்றல் பிணையை சரி செய்வதற்கு மாவட்ட பொறுப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் 1 மற்றும் II ஆம் கட்டங்களுக்காக செயலாற்றல் பிணை பாதுகாப்பு அவ்வாறு வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மாவட்ட செயலகம் மற்றும் மாத்தறை, கம்புறுப்பிட்டிய முலட்டியன பஸ்கொட, வெலிகம, திக்வெல்ல, கிரிந்த, புஹுலவெல்ல மற்றும் திஹகொட ஆகிய 08 பிரதேச செயலகங்கள் மூலம் 2018 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்தை அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டு காலரீதியாக மீளாய்வு செய்யப்படாதிருந்ததுடன் 08 பிரதேச செயலகங்களாலும் வழிகாட்டல் கோவையின் 4.2.2 மற்றும் 4.3.3 இன் பிரகாரம் பெறுகை கால அட்டவணை மற்றும் காலச்சட்டகம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டத்தை காலரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் பெறுகை கால அட்டவணை மற்றும் கால சட்டகத்தினை தயாரிக்கப்பட வேண்டும். | ஆண்டில் கிடைக்கப்பெறும் மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகளில் அந்தந்த சந்தர்ப்பங்களில் உருவாகும் முன்னுரிமை செயற்பாடுகளுக்காக தேவையான கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நேர்வதால் ஆண்டின் ஆரம்பத்தில் பெறுகை கால அட்டவணை மற்றும் கால சட்டகத்தினை தயாரித்தல் நடைமுறை ரீதியான சிக்கலாக இருந்தது. |
| (இ) | பஸ்கொட, வெலிகம, திக்வெல்ல, கிரிந்த மற்றும் புஹுலவெல்ல திஹகொட ஆகிய 04 பிரதேச செயலகங்களால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,226,442 ஆன கணனிகள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் தொடர்பாக அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6.1(அ) மற்றும் 5.6.1 (இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகள் தயாரிக்கப்பட்டு பிரகாரம் கொள்வனவை மேற்கொள்வதற்கும் இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு உடன்படிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1979 இன் 7 ஆம் இலக்க அரசின் காணி (உரித்தை மீறல் பெற்றுக் கொள்ளல்) சட்டத்திற்கு இணங்க | 1979 இன் 7 ஆம் இலக்க அரசின் காணி (உரித்தை மீறல் பெற்றுக் | பதில் வழங்குவதற்கு காலம் போதியதாக இல்லாமையால் எதிர்வரும் |

| | | | |
|---|---|---|---|
| | காணி கட்டளை 175 மற்றும் 179 இன் பிரகாரம் அரசின் காணிகள் இனங் காணப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்துதல் அல்லது வரை படங்களை இனங்காணப்பட்டு தரவு முறைமையொன்று பேணிச் செல்ல வேண்டியிருந்தது. எனினும் மாத்தறை மாவட்ட செயலகம் மற்றும் திஹகொட திஹகொட பிரதேச செயலகம் என்பன அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்ளல்) சட்டத்தின் பிரகாரம் அரசின் காணிகள் இனங் காணப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். | காலத்தில் பதிலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 180 ஆம் இலக்க கட்டளையின் கீழ் கிராம சேவையாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் போது அரசின் காணி திட்டவட்டமாக இனங்காண்பதற்குரிய தரவு முறைமையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. இதனால் அத்துமீறிய கையேற்றல் மற்றும் நிரப்புதல் தொடர்பாக அறிக்கையிடல் போன்ற செயற்பாடுகள் மந்தகெதியில் நிறைவேற்றப் பட்டிருந்தது. | காணி கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்குவதற்கு காலம் போதியதாக இல்லாமையால் எதிர்வரும் காலத்தில் பதிலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாத்தறை மற்றும் திஹகொட பிரதேச செயலகங்களுக்கான தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் இனங்காணப்பட்ட அரசின் காணிகளாக பெயரிடப்பட்டிருந்த மொத்தம் 38 ஏக்கர் அளவிலான 13 காணி தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு காணி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஆக்கபூர்வ ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சில காணிகள் அத்து மீறிய பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. | இனங்காணப்பட்ட அரசின் காணிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு காணி பாதுகாப்பாகவும் பாதுகாக்கப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்குவதற்கு காலம் போதியதாக இல்லாமையால் எதிர்வரும் காலத்தில் பதிலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மாத்தறை பிரதேச செயலகத்தின் அரசின் காணி நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கும் போது 10 சந்தர்ப்பங்களில் 2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை காணி பயன்பாடு மேற்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் காணி தொடர்பாக நீண்ட கால | நீண்ட கால குத்தகை உறுதி தயாரிக்கும் செயற்பாடு முறையான கண்காணிப்புடன் காலரீதியாக நிறைவேற்று வதன் மூலம் காணியிலிருந்து அரசிற்கு உழைக்க கூடிய வருமானத்தை பெற்றுக் | பதில் வழங்குவதற்கு காலம் போதியதாக இல்லாமையால் எதிர்வரும் காலத்தில் பதிலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகை உறுதி தயாரித்தல் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் அக் காணியிலிருந்து அரசிற்கு உழைக்க கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (உ) | 03 பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 06 பாடசாலைகள் காணி, விளையாட்டரங்கு மற்றும் ஏனைய கட்டிடங்கள் கையேற்றல் அரசின் காணி கட்டளைச் சட்டத்தின் கட்டளை 200, 201 மற்றும் 224 இற்கு இனங்காத வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள அரசின் காணி முறையாக கையேற்கப்பட வேண்டும். | மாத்தறை பிரதேச செயலகத்தின் பதிலுக்கு காலம் போதியதாக இல்லாமல் இருந்ததுடன் ஏனைய இரண்டு பிரதேச செயலகங்களின் கிராமத்திள் வரைபடங்கள் மற்றும் காணி பதிவேடுகளை பரீட்சித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | திஹகொட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் காணியை அரசிற்கு கையேற்பது தொடர்பாக தெலம்புகஹஹேன, பலேஉடுகரஹேன, புஞ்சிகந்தேதன்ன மற்றும் கன்னேஹேன ஒன்றிணைந்த காணியில் 2.5184 ஹெக்டேயர் ஆக இருந்தது. அக் காணியை கையேற்பதற்காக 2011 யூலை 29 ஆந் திகதிய கையேற்கும் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வழங்கி 38 (அ) உப கட்டளையின் கீழ் 2012 மே 25 ஆந் திகதி வர்த்தமானியில் அறிவித்தலொன்று வழங்கப்பட்டிருந்தது. 2018 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை இக் காணி கையேற்றல் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | காணி தொடர்பான செயற்பாடுகளை மேற் கொள்ளும் போது கால ரீதியாக பின்தொடர் நடவடிக்கை மேற் கொண்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும். | கையேற்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிக்கு ஆரம்ப திட்டம் மற்றும் துண்டு விபரங்களை பெற்றுக் கொள்வதற்காக 2019 சனவரி 24 ஆந் திகதி அளவீடொன்றை நில அளவையாளர் அத்தியட்சகருக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | மாத்தறை பிரதேச செயலகப் பிரிவில் அரச காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான ஆட்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் 2011, 2013 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தன அதன் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிலை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் தயாரிக்கப்பட்ட பதிவுப் பதிவேட்டினை பரீட்சித்த போது 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/4 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 1.3.3 மற்றும் 1.3.4 பந்திகளின் பிரகாரம் மேற்கொள்ளப் பட வேண்டிய பதிவு செய்யும் பதிவேட்டின் பிரதிகள் மாகாண காணி ஆணையாளருக்கும் காணி ஆணையாளர் நாயகத்திற்கும் அனுப்பியிருக்கவில்லை.<br>எவ்வாறாயினும் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த நபர்களின் பெயர் பதிவு செய்யும் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | மாத்தறை பிரதேச செயலக பிரிவில் 2011, 2013 மற்றும் 2017 ஆண்டுகளில் குடியிருப்பதற்காக காணி இல்லாத நபர்கள் பதிவு செய்யப்பட்டு 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பல வருடங்கள் கடந்திருந்த போதிலும் புதிய காணித துண்டுகளை பகிர்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் இலசமாக 132 அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு இலக்கிடப் பட்டிருந்த போதிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலக்கினை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஐ) | மாத்தளை மாவட்டத்தின் வெலிகம, அகுரஸ்ஸ, மாத்தறை, முலடியன மற்றும் கம்புறுப்பிட்டிய பிரதேச செயலகங்களின் கீழ் மூடப்பட்டிருந்த 10 பாடசாலைகளும், மாத்தறை, முலடியன, மாலிம்பட மற்றும் அதுரலய பிரதேச செயலகங்களின் கீழ் பயன்படுத்தப்படாத 06 அலுவலகங்களும் உத்தியோக பூர்வ இல்லங்களும், வெலிபிட்டிய, வெலிகம, கிரிந்த புஹுல்வெல மற்றும் மாத்தறை பிரதேச | பிரதேச செயலகங்களின் கீழ் காணப்பட்ட அரசின் காணிகள், கட்டிடங்கள் இனங்காணப்பட்டு அது தொடர்பான காலரீதியாக நடவடிக்கை எடுத்து குறித்த சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தகவல்களை தருமாறு காணி தொடர்பான காணிப் பிரிவிற்கும் கட்டிடங்கள் தொடர்பாக நிர்வாக உத்தியோகத்தருக்கும் ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

செயலகங்களின் கீழ் புடவைக்கைத்தொழில் செயற்படாது வருவதால் அங்கு காணப்பட்ட 05 கட்டிடங்களும் வெலிகம, வெலிபிட்டிய, மாத்தறை மற்றும் கொடபொல பிரதேச செயலகங்களில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 13 சனசமூக நிலையங்களும் வெலிபிட்டிய மற்றும் மாத்தறை பிரதேச செயலகங்களின் கீழ் காணப்பட்ட மொத்தம் 05 ஏக்கர் அளவிலான 2 காணிகளும் முலட்டியன, மாத்தறை மற்றும் பஸ்கொட பிரதேச செயலகத்தின் கீழ் முறையே பலநோக்கு கட்டிட ஒன்று 02 வாரச்சந்தைகள் மகப்பேற்று சிகிச்சை நிலையமொன்றும் முலட்டியன பிரதேச செயலகத்தின் கீழ் காணப்பட்ட ‘‘அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை’’ இன் கீழ் 02 நிர்மாண செயற்திட்டங்களும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

## 3.5 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்ட செயலகத்திலும் 06 பிரதேச செயலகங்களிலும் 19 வாகன விபத்துக்களுக்குரிய ரூபா 2,323,132 கூட்டுத் தொகையான நட்டங்கள் சேதங்கள் ஏற்பட்டிருந்தன. அந் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய தரப்பினரிடமிருந்து நட்டங்கள் சேதங்களை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இயங்காத கோவைகளுக்காக பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் ஆலோசனையின் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ அல்லது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு வாகனங்கள் தொடர்பான தேவையான அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்படும் என அறியத் தருகிறேன். |
| (ஆ) | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான கெப் வண்டியொன்று 2018 சனவரி 01 ஆந் திகதி விபத்திற்குடபட்டு 817,250 ஆன நட்டமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அச் சாரதியின் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2019 மார்ச் 19 ஆந் திகதி வரையிலும் வேறு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந் நட்டத்தில் காப்புறுதி நிறுவனத்திலிருந்து ரூபா 530,925 மாத்திரம் மீள் நிரப்பப்பட்டிருந்தது. அலுவலக வளவில் இடம் பெற்றிருந்த மோட்டார் வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 29,509 ஆன நட்டம் மாவட்ட செயலகத்தினால் 2018 ஏப்ரல் 26 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்விபத்து இடம் பெற்ற வண்டிக்கான காப்புறுதியிலிருந்து அப்பணத்தை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த விபத்தினால் இரண்டு கெப் வண்டிகளுக்கும் தொலைபேசி தூணுக்காக ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 882,394 ஆக இருந்ததுடன் விபத்து இடம் பெற்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் ஏற்பட்ட நட்டங்களை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு / அறவிடுவதற்கும் அதற்குரிய பொறுப்பு கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் தாமதம் காணப்பட்டது. | நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | துரிதமாக பரிசோதனை குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ள வேண்டிய பரிசோதனையின் புலனாய்வு அறிக்கை கிடைக்கும் வரை எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளதாக அறிய தருகின்றேன் திருத்த வேலைகளுக்காக ரூபா 530,925 மாத்திரம் செலவிடப்பட்டுள்ளதால் அந்தளவு காப்புறுதியிலிருந்து மீள்நிரப்பப்பட்டிருந்தது. அவ்வாறே தேவையான அறிக்கையை துரிதமாக பெற்றுக்கொண்டு கோவையின் எதிர்வரும் நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும். |
| (இ) | மாவட்ட செயலகத்திலும் 06 பிரதேச செயலகங்களிலும் இடம் பெற்றிருந்த ரூபா 1,945,185 தொகையான 13 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் விபத்து இடம்பெற்று 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பூரண அறிக்கை மீளாய்வாண்டின் இறுதிவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் இடம்பெறாமல் இருக்க சகல பிரதேச செயலகங்களுக்கும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாவட்ட செயலகத்திலும் 03 பிரதேச செயலகங்களிலும் இடம் பெற்றிருந்த ரூபா 204,043 தொகையான வாகன விபத்துக்கள் தொடர்பான 05 கோவைகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாமல் செயற்பாடற்று காணப்பட்டது. | செயற்படாத கோவைகள் தொடர்பாக துரிதமாக | எதிர்காலத்தில் தேவையான அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கு காரணமாக 05 அலுவலகங்களில் ரூபா 3,251,250 ஆன சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அந் நட்டங்களை புத்தகங்களிலிருந்து 2019 மே 31 ஆந் திகதி வரை தவறியிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ரூபா 250,000 இனை விஞ்சிய சேதங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகள் இலகுபடுத்தும் வகையில் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் இறுதி பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பரிந்துரையொன்று வழங்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாகன விபத்துக்கள் தவிர ரூபா 15,840,000 கூட்டுத்தொகையான நட்டங்கள் மற்றும் சேதங்கள் 06 வருடங்கள் முதல் 34 வருடங்கள் வரையான காலத்திலிருந்து சபையின் முன்கொண்டு வரப்பட்டு வந்திருந்ததுடன் அதில் 2004 திசெம்பர் 26 ஆந் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் ரூபா 14,965,038 தொகையான சேதங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும், இந்த நட்டங்களையும் சேதங்களையும் பதிவழிப்பதற்கு அல்லது அறவிடுவதற்கு 2019 மார்ச் 11 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக துரிதமாக செயற்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் துரிதமாக அறிக்கைகளை பெற்றுக் கொள்ளப்பட்டு கோவை நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்படும் |

### 3.6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 25 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட | அனைத்து கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக அவதானிப்பு |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,155,811,607 ஆக இருந்தது. | வேண்டும். | கோரப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் துரிதமாக பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். கருத்து தெரிவித்திருக்க வில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் 2030 ஆண்டளவில் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் போது கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் இனங்காண்பதற்கு 2019 மே 08 ஆந் திகதி வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு மற்றும் எதிர்வலுரும் ஒவ்வொரு ஆண்டிற்கு மான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தினால் இணையத்தளமொன்றை வடிவமைத்து அதனூடாக தேவையான அறிவுறுத்தல் மற்றும் பொது மக்களின் முறைப்பாட்டினை பெற்றுக் கொள்ளும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணையத்தளமொன்றை வடிவமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் அனைத்து மாவட்ட செயலகங்களையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு முதல் இந்த அலுவலகத்திற்காக இணையத்தளமொன்று நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. அந்த இணையத்தளத்தினுள் மின்னஞ்சல் மூலம் பொது மக்களுக்கு முறைப்பாடுகளை செய்ய முடியுமாக இருக்கம். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக பொது மக்கள் முறைப்பாட்டு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பொதுமக்கள் முறைப்பாட்டு பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | பொது மக்களிடமிருந்து இணையத்தளத்தினூடாக முறைப்பாடுகளோ செய்திகளோ கிடைக்கும் போக்கொன்று காணப்படவில்லை. ஆதலால் முறைப்பாட்டு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் தேவைப்பாட்டின் பிரகாரம் முறைப்பாட்டு பதிவேடொன்றை பேணுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன. |